**கடலூர் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**

**மூ.மு.எண். 6100 /அ1/2021 ,நாள். 11 .12.2024.**

பொருள்: பள்ளிக்கல்வி- தமிழ்நாடுஅமைச்சுபணி - கருணை அடிப்படையில் நியமனம் - பணிக்காலத்தில் காலமான அரசு ஊழியர் திரு.இ.சம்பத்குமார் என்பாரின் வாரிசுதாரர் மகள் **செல்வி.ச.ராஜலெட்சுமி**, இளநிலை உதவியாளர் பதவியில் 14.10.2022 மு.ப பணியினைவரன்முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:
1.அரசாணை நிலை எண் : 101, பள்ளிக் கல்வி (பட்ஜெட் II)த் துறை நாள் : 18.05.2018.
2.அரசாணை (நிலை) எண். 48, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை(க்யு1), நாள். 26.02.2021.
3.தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.219251/ஜே/இ4/2021 நாள்.09.04.2021
4.கடலூர் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண். 7647/அ1/2022 நாள்.12.10.2022
5.கடலூர் மாவட்டம், திட்டக்குடி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியரின் கடித ந.க.எண்.06/2023 நாள்.06.06.2023
6.இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம் நாள்.21.06.2023
7.அரசாணை நிலை எண் : 151, பள்ளிக் கல்வி (பக1(1) த் துறை நாள் : 09.09.2022
8.அரசு கடித எண். (e file) எண்.4419 /தொ.க1(1)/ 2024-1, நாள்.17.05.2024.
9.தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர்(பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண் :26062/ஜே/இ2/2023 நாள் :22.05.2024.

************

கடலூர் மாவட்டம், **நல்லூர் ஒன்றியம், சாத்தநத்தம்,** ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் **பட்டதாரி ஆசிரியராக** பணிபுரிந்து 23.04.2014இல் பணியிடை இறந்த அரசு ஊழியர் **திரு.இ.சம்பத்குமார்** என்பாரின் வாரிசுதாரர் மகள் **செல்வி.ச.ராஜலெட்சுமி** என்பாருக்கு பார்வை(4) இல் கண்டுள்ள செயல்முறைகளின்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக **கடலூர் மாவட்டம், திட்டக்குடி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளிக்கு** நியமனம் செய்யப்பட்டு **14.10.2022 முற்பகல்** முதல் பணிபுரிந்து வருகிறார்.

பார்வை 2இல் கண்டுள்ள அரசாணை பத்தி 5.1 மற்றும் 5.2 இல் கீழ்க்காணுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு எவ்வித விதிதளர்வு (Relaxtion of rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு தேவைபடாத (Exemption of Government Orders) தேவைப்படாத அனைத்து அலுவலர்களின் பணிநியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்தப்படும் என்றும், மேலும் பத்தி 5.2 இல் பத்தி எண் 5.1 இன் ஆணையினை நடைமுறைபடுத்தும் விதமாக சம்மந்தப்பட்ட நியமன அலுவலர்களின் (Appointing Authority) ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் (One Level Higher Than Appointing Athority) அவரவர் கட்டுபாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசு பணியாளரின் பணியினை வரன்முறை செய்திடலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பார்வை-5இல் கண்டுள்ள அரசுக்கடிதத்தின்படி இளநிலை உதவியாளர் பதவிக்கு நியமன அலுவலர் முதன்மைக் கல்வி அலுவலர் என்பதால் எவ்வித விதிதளர்வும் தேவையில்லாத பட்சத்தில் நியமன அலுவலர்கள் (Appointing Authority) அவரவர்

Scanned with OKEN Scanner

கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசு பணியாளரின் பணிவிவரம் முறைப்படுத்தலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியருக்கு எந்தவித விதித்தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு ஏதும் தேவைப்படாத நிலையில் பார்வை.8 மற்றும் 9இல் கண்டுள்ள அரசுக்கடிதம் மற்றும் செயல்முறைகளின்படி, **செல்வி.ச.ராஜலெட்சுமி** என்பாருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டவருக்கு கீழ்க்கண்டுள்ள நிபந்தனைகளின்படி இளநிலை உதவியாளர் பதவியில் 14.10.2022 மு.ப பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

1. தனியருக்கு மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டு பணிக்காலம்தகுதிகாண் பருவமாக நிர்ணயம் செய்யப்படுகிறது.
2. பவானிசாகர் அடிப்படைப் பயிற்சி மற்றும் தகுதிகாண் பருவம் முடித்த பிறகே இரண்டாவது மற்றும் தொடர் ஆண்டு ஊதிய உயர்வுகள் வழங்கப்பட வேண்டும்.
3. தகுதிகாண் பருவக்காலத்திற்குள் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் (மாவட்ட அலுவலக நடைமுறை நூல்) தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்.
4. இந்த ஆணை தனியர் சமர்ப்பித்துள்ள கல்விச் சான்றுகள் மற்றும் வருவாய்த்துறை சார்ந்த சான்றுகளின் உண்மைத்தன்மைக்கு உட்பட்டது.
5. தனியர் தனது பணிவரன்முறை தொடர்பான இந்நிகழ்வில் அரசின் விதித்தளர்வு/ அரசாணைகள் தேவை என்ற நிலை எதிர்காலத்தில் எழுமாயின் இச்செயல்முறை ஆணையானது முன்அறிவிப்பு ஏதுமின்றி ரத்து செய்யத்தக்கதாகும்.

| வ. எண் | பெயர், பதவி மற்றும் பணிபுரியும் அலுவலகம் | இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்தநாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்படும் நாள். |
|---|---|---|---|
| 01 | **செல்வி.ச.ராஜலெட்சுமி**<br>இளநிலை உதவியாளர்<br>அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி,<br>திட்டக்குடி, கடலூர் மாவட்டம் | 14.10.2022<br>முற்பகல் | 14.10.2022<br>முற்பகல் |

இணைப்பு- பணிப்பதிவேடு மற்றும் கல்விச்சான்று அசல்

Sd/- 11/12/2024

முதன்மைக் கல்வி அலுவலர்,
கடலூர்

பெறுநர்:
**செல்வி.ச.ராஜலெட்சுமி** இளநிலை உதவியாளர்
அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி
திட்டக்குடி (உரிய வழியாக)

**நகல்:**

1. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2. தலைமையாசிரியர், அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, திட்டக்குடி.
3. கோப்பிற்கு.

Scanned with OKEN Scanner